திரு பிரியந்த வீரசூரிய,
பதில் பொலிஸ் மா அதிபர்,
இலங்கை பொலிஸ் தலைமையகம்,
கொழும்பு 00100

**நினைவூட்டல் நிகழ்வுகளுடன் தொடர்புடைய ICCPR சட்டத்தின் பிரிவு 3 மற்றும் பிற சட்டப்பிரிவுகளின் தவறான பயன்பாடு குறித்து:**

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு (HRCSL) 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 10 (d) இன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதன் அதிகாரத்தின் அடிப்படையில் தங்களுக்கு எழுதிக் கொள்வது, மேற்குறிப்பிட்ட சட்டப்பிரிவானது, சர்வதேச மனித நெறிமுறைகள் மற்றும் தரநிலைகளுடன் உடன்படும் வகையில் தேசிய சட்டங்கள் மற்றும் நிர்வாக நடைமுறைகள் அமைய வேண்டும் என்பதை உறுதிப்படுத்தும் விதமாக நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்று அரசாங்கத்துக்கு பரிந்துரைகளை வழங்கும் அதிகாரத்தை வழங்குகின்றது.

2024 ஆம் ஆண்டு மே மாதம் , இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் நடைபெறும் நினைவூட்டல் நிகழ்வுகளுடன் தொடர்பான விவகாரங்களில் , இலங்கைப் பொலிசாரின் நடைமுறைகள் தொடர்பான , முன்னர் இருந்த பொலிஸ் மா அதிபருக்கு ஆணைக்குழு அனுப்பிய கடிதத்தினை நினைவு கூற விரும்புகின்றது. அமைதியான முறையில் நினைவூட்டல் நடவடிக்கைகள் மற்றும் போராட்டங்களை முன்னெடுத்த நபர்களின் மீது , 2007 ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க குடியியல் மற்றும் அரசிய உரிமைகள் மீதான சமவாய சட்டத்தின் (ICCPR) பிரிவு 3 இந்த தவறான பிரயோகத்தை அடிப்படையில் கைது செய்யப்பட்டமை குறித்து கண்டனம் தெரிவித்தது. மேலும் , 2009 ஆம் ஆண்டு ஆயுதப் போராட்டத்தில் உயிரிழந்த தமிழர்களின் நினைவாக ஏற்பாடு செய்யப்பட்ட நினைவுகூரல் நிகழ்வுகளில் ஈடுபடும் நபர்களை தடுக்கும் வகையில் , குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் (அத்தியாயம் 26) பிரிவு 106 (1) இன் கீழ் , நீதவான் நீதிமன்றங்களில் தற்காலிக கட்டளைகளை பெறுவதற்காக பொலிசார் முயற்சிகளை மேற்கொள்கின்றனர் என்பது தொடர்பில் ஆணைக்குழுவின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. மேலும் சில சந்தர்ப்பங்களில் , அமைதியான நினைவூட்டல் நடவடிக்கைகளில் இடம்பெற்ற கஞ்சு பகிர்வு போன்ற செயற்பாடுகளை பொதுசுகாதார காரணங்களின் அடிப்படையில் தடுத்தனர். அமைதியான முறையில் முன்னெடுக்கப்படுகின்ற நினைவூட்டல் நிகழ்வுகளில் தலையிட மாட்டோம் என 2024 நவம்பர் மாதம் தெரிவு செய்யப்பட்ட புதிய அரசாங்கம் பொது அறிவிப்பொன்றை வெளியிட்டது. ஆனால் , இவ்வாறான பொது அறிவிப்பிற்கு பின்னரும் கூட , குறிப்பிட்ட சில நினைவூட்டல் நிகழ்வுகளைத் தடுக்க நீதிமன்ற உத்தரவைப் பெற பொலிஸார் முயற்சி செய்துள்ளனர். அதில் சில விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன என்பதையும் நினைவுகூர்கிறது.

ICCPR சட்டத்தின் பிரிவு 3 (1) , வன்முறை , பகைமை அல்லது ஓரங்காட்டல்களை தூண்டக்கூடிய தேசிய , இன மற்றும் மத வெறுப்பு தொடர்பான வெளிப்பாடுகளை தடை செய்கிறது. இத்தகைய குற்றம் பல கூறுகளைக் கொண்டிருப்பதுடன் , நடைமுறையில் தவறான முறையில் பயன்படுத்தப்படுவது வழக்கமாகிவிட்டது. இந்த பிரிவு 3 முறையாகப் பயன்படுத்தப்படவில்லை என ஆணைக்குழு அவதானித்ததன்

காரணமாக HRCSL ஆனது ICCPR சட்டத்தின் 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் , ஆனது சட்டத்தின் சரியான பிரயோகங்கள்தொடர்பான வழிகாட்டுதல்களை வெளியிட்டது. (இணைப்பு A). இலங்கை உயர்நீதிமன்றம், SC (F.R) வழக்கு எண் 135/2020 இன் கீழ் இவ் வழிகாட்டுதல்ளை வலியுறுத்தியுள்ளது. ICCPR சட்டத்தின் பிரிவு 3 இன் கீழ் எந்வொரு கருத்து தெரிவித்தலும் குற்றமாக கருதப்படுவதற்கு பல காரணிகளை சட்ட அமுலாக்க அதிகாரிகள் பரிசீலிக்க வேண்டுமென உயர்நீதிமன்றம் அவ்வழக்கில் தீர்ப்பளித்தது. இவற்றில் மிக முக்கியமானது, குறித்த கருத்து தெரிவித்தலானது ஓரங்காட்டல், பகைமை அல்லது வன்முறைக்கு தூண்டுகோலாக அமைகிறதா என்பதை பரிசீலிப்பதை உள்ளடக்குகின்றது. இது குற்றமாக கருதப்படுவதற்கு, குறிப்பிட்ட கருத்தின் மூலம் உடனடி ஆபத்து மற்றும;' நேரடி சேதம் ஏற்படும் வாய்ப்பு உள்ளதா என்பதையும் சட்ட அமுலாக்க அதிகாரிகள் பரிசீலிக்க வேண்டும் என குறித்த குற்றத்தின் இவ் அம்சம் தேவைப்படுத்துகின்றது.

மேலும், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவால் 2022 மே மாதம் வெளியிடப்பட்ட பரிந்துரையின் பிரகாரம் அன்று சேவையில் இருக்கும் இருந்த பொலிஸ் மா அதிபர், ICCPR சட்டத்தின் பிரிவு 3 உடன் தொடர்புடைய விசாரணைகளுக்காக RTM 541 என்ற சுற்றறிக்கையை வெளியிட்டிருந்தார். மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையானது, அனைத்து பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளும், இலங்கை பொலிஸ்" சட்டப் பிரிவின் பணிப்பாளர் வழங்கும் ஆலோசனைக்கேற்ப மாத்திரமே மேற்கண்ட சட்டப்பிரிவின் கீழ் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் எனக்குறிப்பிடப்படுகின்றது. மேலும் இந்த சட்டத்தின் விதிமுறைகளை தவறான முறையில் பயன்படுத்தும் எந்தவொரு பொலிஸ் அதிகாரியும் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார் என்றும் குறிப்பிடப்படுகிறது.

அமைதியான முறையில் முன்னெடுக்கப்படும் நினைவூட்டல் நடவடிக்கைகள் மற்றும் உணவுப்பொருட்கள் வழங்கும் நடவடிக்கைகள் போன்றவை, ஓரங்காட்டல், பகைமை அல்லது வன்முறைக்கு தூண்டும் நடவடிக்கைகளாக கருதப்பட முடியாது எனவும், இவை இலங்கை அரசியல் அமைப்பின் பிரிவு 14 (1)(அ) இன் கீழ் உறுதிப்படுத்தப்பட்ட பேச்சு மற்றும் வெளிப்பாட்டிற்கான சுதந்திரத்திற்கு உட்பட்டவையாகும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் ICCPR சட்டத்தின் பிரிவு 3 இனைப் பிரயோகிப்பது பொறுத்தமற்றது என்பதோடு ஏதாவது வகையில் அதனை பயன்படுத்தும் போது அதன் மூலம் தனிநபர்களை துன்புறுத்தும் நிலைக்கும், பேச்சு மற்றும் வெளிப்பாட்டிற்கான சுதந்திரத்தை மீறுவதற்கு வழிவகுக்கும்.

மேலும், நினைவூட்டல் நடவடிக்கைகள் என்பவை "இழப்பிற்கான எதிரீடுகள்" என்பதன் ஒரு பகுதியாகும். எனவே பாதிக்கப்பட்ட சமூகங்களின் உரிமைகளை மதித்தல், பாதுகாத்தல், போன்றவை இலங்கை அரசின் சட்ட பூர்வ கடமையாகும். 2018 ஆம் ஆண்டு 34 ஆம் இலக்க இழப்பீட்டிற்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகச் சட்டமானது "இழப்பீட்டிற்கான எதிரீடுகள் என்பது", பாதிக்கப்பட்ட சமூகங்கள் அல்லது குழுக்களுக்கு பயனளிக்கும் வகையிலான தீர்வுகளை பெற்றுக்கொள்ளும் உரிமையை அங்கீகரிப்பதற்கான நடவடிக்கைகள் என வரையறுக்கிறது. இதில், உயிரிழந்தவர்களை நினைவு கூறும் வழிமுறைகள் உள்ளடக்கப்படும் என வலியுறுத்தப்படுகிறது. எனவே தமிழர் சமூகத்தில் பாதிக்கப்பட்ட நபர்கள், உயிரிழந்தவர்களை நினைவு கூறும் நிகழ்வுகள் மூலம், தங்களது இழப்பிற்கான எதிரீடுகளை பெறுவதற்கும், அது

தொடர்பான விவகாரங்களில் உரிமையினை மதிப்பளித்தல் மற்றும் பாதுகாத்தல் வேண்டும்.

மேலும் நினைவூட்டலுக்கான உரிமையை அங்கீகரித்து 2017 ஆம் ஆண்டு மாண்புமிகு ஜனாதிபதிக்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வழங்கிய பரிந்துரையை ஆணைக்குழு நினைவு கூறுகிறது. (இணைப்பு B) அதன் மூலம் அவர்கள் எந்த சமூகத்தையோ, அரசியல் நம்பிக்கையையோ சேர்நதவர்களாக இருந்தாலும் அனைத்து நபர்களுக்கும் தங்களுடைய அன்பிற்குரியவர்களை இழந்த துயரை பகிர்ந்துகொள்வதற்கும் அவர்களை நினைவு கூறுவதற்கான வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.

அமைதியான முறையில் முன்னெடுக்கப்படும் நினைவூட்டல் நடவடிக்கைகள் (உயிரிழந்தவர்களை நினைவு கூறும் செயல்கள்), தமிழர் சமூகத்தில் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு வழங்க வேண்டிய இழப்பிற்கான எதிரீடுகளின் ஒரு பகுதியாக சட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஒன்று என்பதனால் இது தொடர்பில் இலங்கை பொலிஸின் அனைத்து பிரிவுகளுக்கும் மும்மொழிகளிலும் தெளிவான வழிகாட்டுதல்களை வழங்குமாறு ஆணைக்குழு பரிந்துரைக்கிறது. மேலும், தேசிய, இன,அல்லது மத வெறுப்பை ஊக்குவிக்கும் மற்றும் ஓரங்காட்டல், பகைமை அல்லது வன்முறைக்கு தூண்டுதலாகவும் அமையாத மற்றும் உடனடி சேதம் ஏற்படுத்தக் கூடிய சாத்தியத் தன்மை இல்லை எனக் கருதப்படும் நடவடிக்கைகள், மதிக்கப்பட மற்றும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பது தொடர்பில் வலியுறுத்தப்படல் வேண்டும். மேற்குறிப்பிட்ட வழிகாட்டுதல்களின் அடிப்படையில் சம்மந்தப்பட்ட நிருவாகப் பிரிவுகளில் உள்ள பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள், அமைதியான முறையில் முன்னெடுக்கப்படும் நினைவூட்டல் நடவடிக்கைகளை தடுக்கும் பொருட்டு நீதிமன்ற உத்தரவுகளைப் பெறுவதை தவிர்க்க வேண்டும் என்றும் அறிவுறுத்தல் வழங்கப்பட வேண்டும். குறிப்பிட்ட விவகாரத்தில் உங்கள் பங்களிப்பினை வரவேற்பதோடு மேலும் பரிந்துரைக்கப்பட்ட விடயங்களை நிறைவேற்றுவதற்கு, இலங்கை பொலிஸிற்கு ஆதரவும் ஆலோசனையும் வழங்க தயாராக உள்ளோம் என்பதையும் அறியத்தருகிறோம்.

ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர்
டு.வு.டீதெஹுதெனிய
தவிசாளர்
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

பிரதி :
மாண்புமிகு அனுரகுமார திசாநாயக்க
இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் ஜனாதிபதி,
பாதுகாப்பு அமைசச்சர்,
ஜனாதிபதி செயலகம்
கொழும்பு 1